சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 60/2020

பெயர். திருமதி. சோபனா நாள்.18.09.2025
க/பெ. முத்துராமன்

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி</u>**

1) விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. என்னுடைய விபத்துப் பதிவேட்டு நகல் ம.த.சா.ஆ.2. என்னுடைய காயச்சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.3. மருத்துவ செலவீன ரசீதுகள் ம.த.சா.ஆ.4. நான் பயணம் செய்த ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.த.சா.ஆ.5. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.6. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் ம.த.சா.ஆ.7 முதல் 9. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.10 மற்றும் 11. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) நான் பயணம் செய்த ஆட்டோ ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநர் சாலையைக் கடக்கும்பொழுது தான் கார் வந்து மோதியது என்றால் ஆட்டோ சாலையைக் கடக்கவில்லை. விபத்து ஆட்டோ ஓட்டுநராலும் ஏற்பட்டது என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் மட்டும் தனிப்பட்ட முறையில் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரின்

ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், அதனால்தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்படட்வர் அல்ல என்றால் சரியலல். 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.